**வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பன - 2018**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் உள்ள விடயங்கள் தொடர்பாக என்னால் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியவில்லை.

இந்த விடயங்களின் விளைவாக, நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் உள்ள பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாக என்னால் ஏதேனும் சரிசெய்தல் தேவையா என்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை கணக்கீட்டு நியமம் 33 இன் பிரிவு 33.9 உப பிரிவின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரை வெளிப்படுத்துதல், தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் காணப்படுமாயின் நிறுவனத்தினால் தொடர்புடைய தரப்பினருக்குகிடையே தொடர்பின் தன்மையால் நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் தொடர்பின் காரணமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை அறிந்து கொள்வதற்காக உரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள் தொடர்பான தகவல்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 33 இன் 39.9 உப பிரிவின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினரின் தொடர்பின் தன்மை மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும் தொடர்புடைய தரப்பினரின் தொடர்பின் தன்மை மற்றும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கம்பனி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | வெளிப்படுத்தலின் கீழ் நிதிக் கூற்றுக்களில் கம்பனியினால் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை நிதியிடல் அறிக்கையின் நியமம் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிறுவனமொன்று தமது கணக்கீட்டு கொள்கையாக தெரிவுசெய்ய வேண்டியது இழப்பு படிகள் உயிர்வாழ்வின் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கு சமமான தொகையாக இருத்தல் வேண்டும். எனினும் ரூபா 230 மில்லியன் ஐயக்கடனுக்காக ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இழப்பீட்டு நிதி ஏற்பாடு கால ரீதியில் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>அடுத்துவரும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பாடுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இழப்பீட்டு ஏற்பாடு கால ரீதியில் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் செயற்திட்ட பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் (IPCs) ரூபா 683.04 மில்லியன் தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>நிதிக் கூற்றுக்களில் வருமானங்கள் இனங்காணப்படுவது வருமானத்தை இனங்காணும் குறிகாட்டிகளின் பிரகாரம் அதற்குரிய ஆபத்துக்கள் மற்றும் நலன்கள் நுகர்வோர்களுக்கு மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆகும். ஒப்பந்த வேலைகளை கவனத்தில் கொள்ளும் போது ஆபத்து மற்றும் | குறைத்து அல்லது அதிகரித்து அறிக்கையிடுவதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் வருமானமும் அந்த ஆண்டிலேயே அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நலன்கள் மாறுகின்ற சந்தர்ப்பமாக கவனிக்க வேண்டியது சேவை பெறுனர்களினால் வேலைப் பெறுமதி உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆகும். அதனால் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வேறுபாடுகள் இல்லை. | |
| (ஆ) | கம்பனியின் செயற்திட்ட பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மானங்களுக்குரிய கூட்டு மொத்தமான ரூபா 1,571.63 மில்லியன் ஆன இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் (IPCs) மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனி நிர்மாண நடவடிக்கைககளில் இருந்து பெறுகின்ற வருமானங்கள் கம்பனிக்கு சான்றுபடுத்தப்பட்ட பட்டியல்கள் கிடைத்ததன் பின்னரே வருமானமாக இனங்காணப்படுகின்றது. | குறைத்து அல்லது அதிகரித்து அறிக்கையிடுவதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் வருமானமும் அந்த ஆண்டிலேயே அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | கம்பனிக்கு சொந்தமான இடைக்கால கொடுப்பனவு சான்றுகள் காணப்படாமையின் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றுகளை கவனத்தில் கொள்ளாமல் பண பற்றுச்சீட்டின் அடிப்படையில் செயற்திட்டங்களில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 10.98 மில்லியன் ஆக கம்பனி கணக்கீடு செய்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>பிரச்சினைகள் முழுமையாக முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். சில சந்தர்ப்பங்களின் போது சான்றுப்படுத்தப்பட்ட பட்டியல்களை அனுப்புவதற்கு முன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தீர்த்து வைக்கப்படுகின்றது. | மிகவும் பொருத்தமான மற்றும் உரிய சான்றுகளின் அடிப்படையில் மாத்திரமே கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (இ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக உறுதிப்படுத்தப்பட்ட வருமானம் ரூபா 12.40 மில்லியன் தொகை ஆரம்ப நிறுத்தி வைத்தல் உழைப்புக்களின் சீராக்கங்கள் இன்றி மீளாய்வாண்டின் வருமானமாக | ஏற்றுக்கொள்கின்றோம். | குறைத்து அல்லது அதிகரித்து அறிக்கையிடுவதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டின் வருமானமும் அந்த ஆண்டிலேயே |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருந்தது. அதன் விளைவாக மீளாய்வாண்டில் உறுதிப்படுத்தப்பட்ட வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து காணப்பட்டது. | | அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகை கடன் கொடுத்தோர் மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்களில் பிழையாக வகைப்படுத்தப்பட்டிருந்தமையினால் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நடைமுறையல்லா பொறுப்புக்கள் ரூபா 8.29 மில்லியனினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தல் வழுக்கள் அடுத்து வரும் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனி சகல பொறுப்புக்களையும் சரியாக இனங்கண்டதன் பின்னர் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாததாக வகைப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | மூடப்பட்ட அல்லது பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்கு உரிய முற்பணம் ரூபா 55.14 மில்லியன் தொகை கணக்குகளில் சீராக்கப்படாமல் தொடர்ந்தும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | உரிய செயற்திட்டங்களை மூடுதல் அல்லது அதன் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் சகல முற்பணங்களும் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | கம்பனியால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக காப்புறுதி தவணைப்பணமாக ரூபா 9.28 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட காப்புறுதி தவணைப்பணம் ரூபா 4.12 மில்லியன் மீளாய்வாண்டின் செலவினமாக கருத்தில் கொள்வதற்கு பதிலாக பெறவேண்டியதாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக காப்புறுதி தவணைப்பண செலவினம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், முற்செலுத்துகைகள் அப்பெறுமானத்தினால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>அடுத்து வரும் நிதிக் கூற்றுக்களில் வழுக்கள் சரிசெய்யப்படும். | கம்பனியின் சரியான நிதி நிலைமையை ஏற்றுக் கொள்வதற்காக கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்குரிய சகல கொடுப்பனவுகளும் கணக்கீட்டில் அட்டுறு அடிப்படையில் குறிப்பிடப்படல் வேண்டும். |

## 1.6 இணக்கஞ்செயய்ப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி | தொடர்புடைய பதிவேடுகளின் படி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் மற்றும் நிறுத்தி வைத்தல் பணத்திற்காக பெற வேண்டிய தொகை | 3,273.05 | 2,990.74 | 282.31 | ஏற்றுக்கொள்கின்றோம். மீதி வேறுபாடுகளுக்கான காரணங்களை காண்பித்து இணக்கக் கூற்றுக்கள் அறிக்கையிடப்படும் திகதி வரையில் தயாரிக்கப்பட்டு காணப்படுவதுடன், வழுக்களை திருத்துதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. | இணக்கக் கூற்றுக்கள் காலரீதியில் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |
| கம்பனியால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தொகைகளுக்கு இடையிலான வேறுபாடு | 1,541.29 | 378.58 | 1,162.72 | ஏற்றுக்கொள்கின்றோம். | இணக்கக் கூற்றுக்கள் காலரீதியில் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 1995 இன் 15 ஆம் இலக்க கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியம சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோஷலிஷ குடியரசின் 1999 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1074/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் | வர்த்தமானியில் காண்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஐந்து (05) இல் கம்பனியின் நான்கு (04) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுவதற்கு பதிலாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் (SMEs) இற்கான SLFRS) தயாரிக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வின் போதும் இந்த அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந் தது. 1074/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகளை பூர்த்தி செய்கின்ற எந்தவொரு கம்பனியினதும் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படல் வேண்டும். எனினும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட கணக்கீட்டு நியமம் மூன்றில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தை பின்பற்றுவதற்கு கம்பனி தகைமை பெற்றிருந்தது. ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு முரணாக இல்லை. | இலங்கை சனநாயக சோஷலிஷ குடியரசின் 1999 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1074/7 ஆம் இலக்க வர்த்தமானியில் காண்பிக்கப்பட்டுள்ள ஐந்து (05) நிபந்தனைகளில் நான்கு (04) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை யினால் கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு முரணாக கம்பனிக்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் பிரகாரம் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் ஆளணிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 2016 ஒக்டோபர் 27 ஆந் திகதிய பீஈடீ 01/2015(i) (திருத்தப்பட்ட) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் ஆளணியினர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் கம்பனியால் மீளாய்வாண்டின் போது 36 ஊழியர்களுக்காக வாகன படிகள் மற்றும் எரிபொருள் படிகளாக முறையே ரூபா 17.94 மில்லியன் மற்றும் ரூபா 8.56 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின3.5 ஆம் பிரிவிற்கு முரணாக கம்பனியின் தலைவரால் இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது நான்கு ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vii) | 2015 யூன் 17 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவிற்கு முரணாக மாதாந்த படி மற்றும் வருகைப் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 2.41 மில்லியன் கம்பனியன் தலைவருக்கும், நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்களுக்கும் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (viii) | 2003 யூன் 02 ஆந் திகதிய | கம்பனியின் முகாமைத்துவத்தால் 2018 | ஏற்றுக்கொள்ளவில்லை. | வரிசை அமைச்சினதும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் நல்லாளுகை சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் சகல சொத்துக்கள் மற்றும் இருப்புக்களை மெய்மையாய்வு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். கம்பனியால் பௌதீக இருப்பு மெய்மையாய்வு மேற்கொளப்படாதிருந்தமையால் ரூபா 1,161.19 மில்லியன் கிரயமான சொத்துக்களின் பௌதீக இருப்பு தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | கம்பனியின் செயற்பாட்டிற்காக பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளை உள்ளடக்குதல் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. எனினும் பொது முயற்சிகள் திணைக்கள வழிகாட்டிகளுக்கு இணங்கும் வகையில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டிகள் முகாமைத்துவத்தால் பின்பற்றப்படுகின்றது. | தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ix) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | கம்பனியால் 2013 யூலை முதல் 2016 திசெம்பர் வரையான காலத்திற்காக வாழ்க்கைச் செலவு படியை கவனத்தில் கொள்ளாமல் ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக கம்பனியின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அதன் மிகைக் கட்டணமாக ரூபா 68.75 மில்லியன் பொறுப்பொன்று எழுந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அந்த பொறுப்புக்களிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>தற்போது வரையில் கம்பனி கணக்கீடு செய்த ஊழியர் சேமலாப நிதியப் பொறுப்புக்கள் ரூபா 47.54 மில்லியன் ஆகும். எனினும் மிகைக் கட்டணத்திற்கான ஏற்பாடு இன்னும் நிதிகூற்றுக்களில் இனங்காணப்படாதிருந்ததுடன் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வரிசை அமைச்சினதும் தாய் நிறுவனத்தினதும் ஆலோசனையுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவாக வரிக்குப் பின் இலாபம் ரூபா 36.8 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்குப் பின் இலாபம் ரூபா 220.4 மில்லியன் ஆகும். அதனால் நிதி விளைவில் ரூபா 183.2 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்திட்டங்களின் உறுதிப்படுத்தப்பட்ட வருமானம் குறைவடைந்தமை மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் குறைவடைந்தமை என்பன நிதி விளைவின் வீழ்ச்சிக்கு பிரதான காணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

----------------------------------

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ------ | ------- |
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1.81 | 1.47 |
| விரைவு விகிதம் | 1.74 | 1.45 |
| மொத்த இலாப விகிதம் | 6.84% | 11.7% |
| தேறிய இலாப விகிதம் | .87% | 3.69% |

கம்பனியின் நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் என்பன மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வீச்சில் பேணிச்சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மொத்த இலாப விகிதம் 4.86 சதவிகிதத்தால் குறைவடைந்திருந்ததுடன் தேறிய இலாப விகிதம் 2.82 சதவிகிதத்தால் குறைவடைந்திருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வருடாந்த இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வருமானம் 30 வீதத்தினாலும், ஏனைய செயற்பாட்டு வருமானம் 35 வீதத்தினாலும் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 2008/1109 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் எந்தவொரு செயற்திட்டத்தையும் உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்குவதில்லை என சபை தீர்மானம் எடுத்திருந்தது. எனினும் கம்பனியால் பெறப்பட்ட 3,382 செயற்திட்டங்களில் 5.4 சதவீதத்திற்கு சமமான 185 திட்டங்கள் மாத்திரமே 2008 முதல் 2018 வரையான காலப்பகுதியில் கம்பனியால் நேரடியாக பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் 3,197 செயற்திட்டங்கள் உப ஒப்பந்தகாரர்களால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய ஆந் திகதிய 2008/1109 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கு இணங்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்ற நிர்மாண வேலைகளை கம்பனி மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்னியின் நிதிக்கூற்றுக்கள் ஐந்து மாதகால தாமதத்தின் பின்னர் சம்ர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கம்பனி அதன் நிதிக்கூற்றுக்களைச் சம்ர்ப்பித்தல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனின் முகாமைத்துவத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு காலரீதியில் அதன் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

## 4.3 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்ததாக கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்ததாக கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் வருடாந்த பாதீடு தயாரிக்கப்படவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அது அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட வேண்டும். |